செ.வெ.எண்: 51 நாள்: 18.03.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள படித்த வேலைவாய்ப்பு அற்ற நபர்கள் வேலைவாய்ப்பிற்குரிய பயிற்சி வகுப்பினை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட வேலைவாய்ப்பு துறை மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இணைந்து நடத்திய வாழ்க்கை வழிகாட்டி பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (18.03.2017) நடைபெற்றது.

இந்த வாழ்க்கை வழிகாட்டி பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது

தமிழகஅரசு பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அரசு வேலைகளுக்கு தகுதி பெறும் வகையில் போட்டி தேர்வுகளில் வெற்றி பெறவும், படிப்பு முடித்தவர்கள் போட்டி தேர்வினை எதிர் கொள்ளவும் இலவச பயிற்சி வகுப்பு நடத்த உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியகரத்தில் வாழ்க்கை வழிகாட்டி பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்பின் முக்கிய நோக்கம் அனைவரும் அரசு வேலைவாய்ப்பு பெறும் வகையில் போட்டி தேர்வில் வெற்றி பெற செய்வது ஆகும்.

மேலும் இப்பயிற்ச்சி வகுப்பில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயம் மூலம் நடைத்தப்படவுள்ள குரூப் I,II,III,IV, மத்திய அரசு UPSC தேர்வுகள் மற்றும் பல்வேறு போட்டி தேர்வுகளில் கேட்கப்படும் மாதிரிவினாக்கள், தேர்வு எழுதும் முறை, படிப்பதற்கான நேரம் மற்றும் பயிற்சி புத்தகங்கள் போன்ற பல்வேறு தகவல்கள் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. இதில் சுரேஸ் IAS அகாடமி பயிற்றுநர்கள் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பான பயிற்சிகள் அளித்தனர். ஆசிரியர் தகுதி தேர்வு நடைபெறவுள்ளதை தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் சார்பில் கடந்த வருடம் போல் இந்த வருடமும் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தபடவுள்ளது. எனவே நமது மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் பட்டபடிப்பு முடித்த பட்டதாரிகள் பயிற்சி வகுப்பினை பயன் படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் இப்பயிற்சி வகுப்பின் மூலம் மாணவ,மாணவிகள் போட்டி தேர்வுகள் குறித்து உரிய விழிப்புணர்வு பெற்று அரசு பணிக்கு தகுதி பெற வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் திரு.விருத்தப்புரி, திரு.அடைக்கன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.காளிதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**